RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22240

# ஆற்றுப்படை இலக்கியங்களில் காணப்படும் இயற்கையின் சிறப்புகள்

மோ. விஜயசோபா [அ, *], ஐ. லாலி ஏதேஸ் [அ]

[அ] தமிழாய்வுமையம், முஸ்லீம் கலைக்கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது), திருவிதாங்கோடு,கன்னியாகுமரி-629174, தமிழ்நாடு, இந்தியா

# Characteristics of Nature found in the Aatrupadai Literatures

**M. Vijaya sobha [a, *], J. Lali Ethaz [a]**

[a] Research Centre of Tamil, Muslim Arts College, (affiliated to Manonmaniam Sundaranar University) Thiruvithancode, Kanniyakumari-629174, Tamil Nadu, India

* Corresponding Author:
vijayasogh@gmail.com

Received: 08-01-2022
Revised: 12-04-2022
Accepted: 25-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

In the Article we can see the importance of nature described in Aattupadai Literature one of the "Pathupaattu" collection in sangam literature. New ideas about the harmony between nature and people of Sangam Period are also been described in the paper, Imageries about sun, rain, land, flower and mountains by the sangam poets were also pointed out with noted evidences. Hence, this paper unfolds the significance and role of nature in the chosen domain area.

**Keywords:** Aatrupadai, Nature, Classical poets, Environment

## முன்னுரை

இயற்கையே இலக்கியங்களின் முதல் பாடுபொருளாக அமைகின்றது. கற்பனைக்கும் உவமைக்கும் நிலைக்களனாக இயற்கையின் தனித்துவத்தையும் மேன்மையையும் முழுமையாகக் கொண்டதாக முதற்பொருளும் கருப்பொருட்களும் விளங்குகின்றன.

மலை, காடு, வயல், கடல், மணல் என்பன ஐந்தும் இயற்கைச் சூழலைத் தீர்மானிக்கும் இன்றியமையாத ஐந்து நிலப்பிரிவுகளாக அமைகின்றன. இவை ஐந்தும் சேர்ந்தவை நிலம் என ஒரே பூதமாகி நின்றன. ஐம்பூதங்களில் தீ, நீர், காற்று, ஆகாயம் ஆகிய நான்கு பூதங்களும் ஐம்பூதங்களின் இயக்கமே இயற்கையைக் கட்டுப்படுத்துகின்றன. ஆற்றுப்படை நூல்களில் காணப்படும் இயற்கையின் சிறப்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இயற்கை சொற்பொருள் விளக்கம்

"இயற்கை" என்ற சொல் பண்டு இயல்பு என்னும் பொருளில் இடம்பெற்றதாகத் தெரிகின்றது. "இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்" என்னும் தொல்காப்பிய நூற்பாவுக்கு உரைகண்ட சேனாவரையர், இயற்கைப்பொருள் என்பதற்குத் "தன்னியல்பில் திரியாது நின்ற பொருள்" என விளக்கம் தருகின்றார்.

## இயற்கை பற்றி அறிஞர்களின் கருத்து

ஜே.சீரீப் என்ற அறிஞர் தம்முடைய கவிதைகளில் இயற்கை கூறுகளைப் பற்றிய நூல் ஒன்றில் "இயற்கையுலகமும் மனித உலகமுமே கவிஞன் பணிபுரியும் களங்கள்" என்று குறிப்பிடுகின்றார். "மனித இயல்பும் இயற்கை உலகமே கவிஞனின் இரு பொருள்கள்" என்று கூறும் ஸ்டா∴போர்டு புரூக் என்ற ஆசிரியர் இவற்றுள் மனிதனைப் புறக்கணித்து இயற்கையையோ அல்லது இயற்கையைப் புறக்கணித்து மனிதனையோ முழுமையாகப் பாடுவது குறையுடையது என்று குறிப்பிட்டுள்ளார்.

## இளங்கோவடிகளின் கருத்து

"மாமழை போற்றும் மாமழை போற்றதும்" என்ற மழையினையுமே வழிபடு கடவுளாகப் போற்றியுள்ள தன்மையினைக் காணமுடிகின்றது. "உலகுதொழு" மண்டிலம் எனும் தொடர் கதிரவனைத் தொழும் நிலையினை உணர்த்துவதாய் உள்ளது. காப்பிய ஆசிரியர்கள் இவ்வியற்கை அழகினைத் தம் காப்பியங்களில் மிக விரிவாக எடுத்தியம்பியுள்ளனர். பக்தி இலக்கியங்கள் இறைவன் ஐம்பெரும்பூதங்களாயும் கதிர்களாயும் விளங்கும் நிலையினை இயம்புகின்றன.

"நீராய் நிலனாய்த் தீயாயக் காலாய் நெடுவானாய்ச்

சீரார் சுடர்கள் இரண்டாய்"

இறைவன் இலங்குவதாய் நம்மாழ்வர் குறிப்பிடுகிறார் (Subramanian, 2018).

## நக்கீரனின் கருத்து

கவிதையில் இயற்கைப் புனைவு என்ற தொடருக்குக் கவிதையில் இயற்கையை அழகு வடிவமான இயற்கைக்கு மேலும் அழகு கூட்டிக் கவிதைகளில் காட்டுவது என்றும் இங்கு பொருள் கொள்ளப்படுகிறது.

"இயற்கையின் எழிலைக்

கை புனைந்தியற்றாக் கவின் பெறுவனப்பு" (பாரதியார் கவிதை தொகுதி)

கைபடாதது எதுவோ அது இயற்கை இயற்கை அழகு மிக்கது இயற்கையின் பேரொளியை வியந்து பாடுகின்றார்.

## சங்ககால இயற்கை

மனிதன் இன்று அறிவியலில் பல சாதனைகளைப் படைத்து வருகிறான். நாகரீகத்தின் புறஅழகின் உச்சியிலிருக்கிறான். இயற்கைக் காட்சிகள் அவனுடைய சிந்தனைகளை மாற்றித் தன்பால் ஈர்க்கும் தன்மைப் பெற்றிருக்கின்றன. இயற்கையினைக் கண்டு ஒதுங்கிச்; செல்லும் மனிதன் இல்லை எனலாம். சங்ககாலப் புலவர்கள் காட்டும் இயற்கையும் பாவேந்தர் காட்டும் இயற்கையும் இங்கு இடம் பெறுகின்றன. சங்ககாலப் பாடல்கள் காதலையும் வீரத்தையும் பற்றியே பேசுகின்றன. காதல் வீரம் ஆகியவற்றினிடையே இயற்கையும் நிலையான இடம் பெறுகிறது.

## சங்ககால மக்களின் வாழ்வு

சங்ககாலத் தமிழ் மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடத்தி வந்தனர். வான், கோன், மலை, அருவி, காடு, ஆறு, கொடி, செடி, வயல், கடல், கானல், விலங்கு, பறவை என உலகில் இயற்கை பரந்து விரிந்து காணப்படுகிறது. இயற்கையோடு அவர்கள் உறவும், உரிமையும் கொண்டு வாழ்ந்து வந்தனர். இயற்கையின் வளமும், வனப்பும், ஆற்றலும், கருணையும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன.

வாழ்வு தழைக்கவும், வைப்பம் நீங்கவும் உழவரெல்லாம் பொன்னேர் பூட்டவும் நகரப் பெண்களின் செப்புக் குடங்கள் நிறையவும், ஏரி, குளங்கள் வழிந்தோடும்படியும், பூவும், காயும், மரமும், தழையும், நனையும்படியும் வந்த மழையின் பொதுவுடைமையைப் பாடவந்த கவிஞர்

"இல்லார்க்கும் செல்வர்கள் தாமே

என்பாருக்கும் தீயவர் மற்றும்

நல்லார்க்கும் முகிலே சமமாய்

நல்கும் செல்வம் நீ யற்றோ"

என்று விளித்துப் பாடியுள்ளார் நல்லவர்க்கும், தீயவர்க்கும் வேறுபாடில்லாமல் பெய்யும் மழையைக் கவிஞர் வாழ்த்தியும் பாடியுள்ளார் (Puliyoor Kesikan, 2002).

## சங்க புலவர்களின் கூற்று

சங்ககாலப் புலவர்கள் தமது வறுமை நிலை நீங்க மன்னைப் பாடி பரிசில் பெற்று வந்தனர். இவர்கள் பழுமரம் தேடிச் செல்லும் பறவை போல இயல்புடையவர்கள் ஓர் அரசனைப் பற்றிய உண்மையான புகழினைப் பாடி பரிசுகள் பெற்று வந்த பாணர், பொருநர், சிறுபாணர், பெரும்பாணர், கூத்தர் மற்றும் பிற புலவர்கள் தான் பெற்றுப் பொருட்களையும் மற்றொரு புலவர்களிடம் அம்மன்னைப் பற்றி புகழ்ந்துக் கூறி பரிசு பெற்று வந்த மன்னனுடைய ஊர், இயற்கை வளம் போன்றவையும் அகம், புறம் ஆகிய காதல், வீரம் பேசப்பட்டிருப்பினும் இடைஇடையே இயற்கையும் நிலையான இடம் பெறுகின்றது. புலவர்கள் அரசரை வாழ்த்திப் பாடும் போது முதலில் நாட்டு வளம், மலை வளம் முதலான இயற்கைப் பற்றியே பாடியுள்ளார்.

சங்கப் புலவர்கள் இயற்கையுடன், வாழ்வினையும் இணைத்துப் பாடுகின்றனர். அகம், புறம் என்ற இருநிலைகளிலும் இயற்கை இடம் பெறுகின்றது. ஆனால் இயற்கைக்கு என்று தனியாகப் பாடல்கள் இடம் பெறவில்லை. இயற்கையுடன் இணைந்த வாழ்க்கையினையே மேற்கொண்டதால் இயற்கையை வாழ்க்கையுடனேயே சேர்த்துப் பாடுகின்றனர்.

## வருணனைப் பொருட்கள்

சங்கப் புலவர்கள் இயற்கையை வாழ்க்கையுடன் இணைத்தே பாடுகின்றனர். கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றுடன் இயற்கை இடம் பெறுகிறது. இயற்கையை இயற்கையாக வருணிக்கும் இலக்கியநெறி சான்றோர் செய்யுட்களில் இல்லையாயினும் அக்காலப் புலவர்கள் இயற்கை உலகினைத் தமது பாக்களுக்கு இன்றியமையாய் பின்னணியாகக் கொண்டு பாடினர் என்று ஆசிரியர் கைலாசபதியின் கூற்று இதனை வலியுறுத்துகின்றது.

## ஞாயிறு வருணனைகள்

பத்துப்பாட்டில் புலவர்கள் இயற்கையை வணங்கி நூலின் தொடக்கத்தில் இயற்கைப் பொருளான ஞாயிற்றை வருணித்துக் கூறியுள்ளனர். ஞாயிறு தெய்வமாகவும் வணங்கப்படுகிறது. இருளை நீக்கி ஒளியைத் தரும் பகலவன் என்பர்.

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதிரு

பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு

ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி" (திருமுருகு.பா.13)

உலகில் வாழும் உயிர்கள் எல்லாம் மகிழும்படி மேருமலையை வலமாக எழுந்து, பற்பல சமயத்தவரும் புகழ்கின்ற ஞாயிறு கீழ் கடலிடத்தே எழுக் கண்டாற்போன்று இடையீடு இன்றி

எக்காலத்தும் விளங்குவதும், மிக நெடுந்தூரத்தில் விளங்கிப் பிரகாசிப்பதுமாகிய ஒளியினை உடையவன் ஞாயிறு என்று வருணிக்கின்றார்.

## ஞாயிற்றின் சிறப்பு

ஞாயிற்றின் தோற்றத்தினால் தான் இந்த உலகம் இயங்குகின்றது. ஆகாயத்தில் ஞாயிற்றின் கதிர் விரியும் விடியற்பொழுதில் துயில் உணர்ந்து எழுக என்ற சூரியனின் தோற்றம் விடியலை உணர்த்துகின்றது. "வான்கண் விரிந்த விடியல் ஏற்றெழுத்து" (மலைப்படு பா.257) என்று மலைபடுகடாம் புதிய சிந்தனைகளைப் பதிவு செய்கின்றார்.

ஆகாயத்தில் திரியும் ஞாயிற்றின் கதிர்களால் சுடப்படாத அகன்ற இடத்தில் உடையதாகக் குன்று விளங்குகின்றது. "ஞாயிறு தெறாஅ மாகதனந்தலை" (மலைப்படு.பா.272)

பொருநராற்றுப்படையில் ஞாயிறு கடலிலே தோன்றியவுடன் கடற்பரப்பிலே தன் கதிரைப் பரப்பிப் பின்னர் மெல்ல விண்ணிலேறி உலகினைத் தன் ஒளியுள் அகப்படுத்திக் கொண்டதை,

"பல்வ மிமிசைப் பகற்கதிர் பரப்பி

வெல்வெஞ் செல்வன் விசும்பு படரந்தாங்கு

பிறந்து தவழ்" (பொருநர்.பா.135-137)

இவ்வாறாக ஞாயிற்றின் தோற்றம் இருந்ததாகச் சுட்டப்படுகின்றது. புறநானூறு பாடல்,

"மாக்கடல் நிவந்து எழுதரும்

செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ" (புறம் 4-15-16)

சூரியனின் கதிர்களை வருணிக்கின்றார்.

## மழையின் பயன்கள்

வாழ்வு தழைக்கவும், வெப்பம் நீங்கவும், உழவரெல்லாம் பொன்னேர் பூட்டவும், நகரப் பெண்களின் செப்புக் குடங்கள் நிறையவும், ஏரி குளங்கள் வழிந்தோடும்படியும், பூவும், காயும், மரமும், தழையும் படியும் வந்த மழையின் பொதுவுடைமையைப் பாட வந்த கவிஞர்

"இல்லார்க்கும் செல்வர்கள் தாமே

என்பாருக்கும் தீயவர் மற்றும்

நல்லார்க்கும் முகிலே சமமாய்

நல்கும் செல்வம் நீ யன்றோ"

என்று விளித்துப் பாடியுள்ளார். நல்லார்க்கும் தீயவராக்கும் வேறுபாடில்லாமல் பெய்யும் மழையைக் கவிஞர் வாழ்த்தியும் பாடியுள்ளார்.

## நிலத்தின் அமைப்புகள்

நாம் வாழ்வதற்கு ஏற்ற இடமாக அமைவது நிலமாகும். அதன் அமைப்பினை தொல்காப்பியர் வரையறை செய்கிறார்.

"நடுவண் ஐந்திணை நடுவனது ஒழிய

படுதிரை வையம் பாத்திய பண்பே"

மருதம் நெய்தல் பாலை என்ற ஐவகை நிலங்களில் பாலை நீங்கக் கடலால் சூழப்பெற்ற இந்நில உலகுத்தைப் பகுத்துக் கொண்டனர் என்கிறார் (Ilampuranar, 2018).

## பூக்கள் பற்றிய வருணனைகள்

குறிஞ்சி நிலத்திற்கும் கூதிர்காலத்திற்கும், யாமம் பொழுதிற்கும் உரிய பூக்கள் பிற நிலப்பூக்களுடன் மயங்கிக் காணப்படுதல் ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனிப் பூக்களை தொல்காப்பியம் வரையறுத்துக் கூறுகின்றதை,

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்

அந்நிலம் பொழுதொரு வாரா ஆயினும்

வந்த நிலத்தின் பயத்த ஆகும்"

குறிஞ்சிப் பாட்டில் கபிலர் 99 வகை மலர்களைப் பற்றி சுட்டுகிறது (Ilampuranar, 2018).

வள்இதழ்

ஒண் செங்காந்தள் ஆம்பல் அணிச்சம்

தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி

செங்கோடு வேரி, தேமா மணிச்சிகை

உரிதுநாறு அமிழ்கொத்து உந்தூழ் கூவினம்

மாஇருங் குருத்தும் வேங்கையும் பிறவும்

அரக்கு விரித்த பருஏர்அம் புழுகுடன்

மால் அங்கு உடைய மலிவனம் மறுகி

வான்கண் கழிஇய அகல் அறைக்குவைஇ" (குறிஞ்சி 62 - 98)

பெரிய இதழ்;களையுடைய ஒள்ளிய சிவந்த காந்தல் பூ ஆம்பல் பூ அனிச்சம் பூ குளிர்ந்த குளத்தில் பூத்த செங்கழுநிறப்பூ, குறிஞ்சிப்பூ, வெட்சிப் பூ, செங்கோடு வேரிப்பூ, தெமாம் பூ, செம்மணி பெருமுங்கிற் பூ, வில்வப் பூ, வாகைப் பூ, வெட்பாலை பூ, பயனிப்பூ, மகிழம் பூ, காயாம் பூ, மஞ்சாடிப் பூ, தும்பை பூ, அவரைப் பூ, இலவம் பூ, பீர்க்கம் பூ, நாகப்பூ, இருவாச்சிப்பூ, குருந்தம்பூ, ஆத்திபூ, தாழம் பூ மல்லிகைப்பூ, மாம்பூ, புனலிப்பூ, பாலைப்பூ, வாழைப்பூ, வள்ளிப்பூ, நெய்தல் பூ, வருக்கம் பூ, கரத்தைப் பூ, காட்டுப்பூ இது போன்ற பல வகைகள் கபிலர் எடுத்துரைக்கின்றனர்.

## மலர்களின் தோற்றம்

"ஆடுவண்டு இமிரா அழல் அவிர்தாமரை

நீடு இரும் பித்தை பொலியச் சூட்டு" (பெரும் 481 - 482)

வண்டுகள் மொய்க்காத தீயிடத்தே கிடந்த மலர்ந்த வெண் பொற்றாமரையை நீண்ட கரிய மயிரிடத்தை அழகு பெறச் சூட்டுக என்பதை

"முட்தாள சுடர்த் தாமரை

கள் கமமும் நறு நெய்தல்

வள் இதழ் அவிழ் நீலம்

மெல் இலை அரி ஆம்பலொடு

வண்டு இறை கொண்ட கமழ்பூம் பொய்க்கை" (மதுரை - 249-253)

இலைகளுக்கு மேலாக வளர்ந்துள்ள முள்ளையுடைய தாள்களைக் கொண்ட ஒளியுடைய தாமரைப் பூவினையும் மெல்லிய இலைகளையும் வண்டுகளையும் உடைய ஆம்பல் பூக்களோடு வண்டுகள் தங்குதல் உடைய மணம் நாளும் பிற பூக்களை கொண்ட பொய்கை ஓடையில் பூத்திருக்கின்ற பூக்களை வகைப்படுத்திக் கூறுகின்றார்.

“இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த

முள்தாட் தாமரைத் துஞ்சி வைகறைக்

கள்கமழ் நெய்தல் ஊதி காமரு சுனைமலர்” (திருமுருகு. 72-73)

கரிய சேற்றினையுடைய அகன்ற வயலில் விரிந்து மலர்ந்த முள் பொருந்திய தாள்களையுடைய தாமரை மலரில் இரவெல்லாம் உறங்கி வைகறைப் பொழுதில் மணம் கமழ்கின்ற நெய்தல் மலரில் தேனை உண்டு சூரியன் தோன்றிய பின்னர் மகளிரின் கண்கள் போல மலர்ந்த அழகிய சுனைப் பூக்களை உடைய நாடு என்று நக்கீரர் வருணிக்கிறார்.

## குன்றம் பற்றிய வருணனைகள்

மலையும் மலை சார்ந்த இடம் குறிஞ்சி நிலம். கடவுள் முருகனைச் சுட்டுவர்.

“மாயோன் மேய காடுறை உலகமும்” (தொல். அகத்-5)

என்று நிலத்திற்குரிய தெய்வத்தை இலக்கண நூல் கூறுகிறது.

“மத்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்து

கரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தள்

பெருந் தண் தண்ணி மிவைத்த சென்னியன்” (திருமுருகு.42-44)

குரங்குகளும் முற்றிலும் ஏறிப் பயின்று அறிய முடியாத மரங்கள் நெருங்கிச் செழித்துள்ள பக்கமலைச் சாரலில் உள்ள வண்டுகளும் மொய்க்காத சுடர்போல் சிவந்த காந்தள் பூக்களால் தொடுத்துக் கட்டிய குளிர்ந்த பெரிய மாலையை அணிந்த திருமுடியை உடையவனாக விளங்குகிறான் முருகன்.

துகில் அணிந்த அல்குலம் ஆடிய சாயம் உடைய மகளிர் அகிற்புகை ஊட்டுதற் பொருட்டு விரித்துக் கூந்தலைப் போன்று மயில் தன் தோகையை விரித்து ஆடுவதற்குக் காரணமான கருமேகங்கள் மஞ்சின் இடையை தவழ்கின்ற குன்றம் அக்குன்றத்தில் நீண்டு நிறைந்து விளங்குவதால் இடியேறு தான் அப்பால் செல்லும் யாராலும் எளிதில் ஏறுதற்கு அரிதான முடியுடைய குன்றம் இதனை.

............ மென்தோள்

துகில் அணி அல்குல் துளங்கு இயல் மகளிர்

அகில் உண விரித்த அம்மென் கூந்தலின்

மணிமயில் கலாபம் மஞ்சுஇடைப் பரப்பி

துணிமழை தவழும் துயல்கழை நெடுங்கோட்டு” (சிறுபாண. 261-265)

என்று சிறுப்பாணாற்றுப்படை கூறுகின்றது. சங்கப் பாக்கள் குன்றத்தின் வளமையும் சிறப்பினையும் எடுத்துரைத்துள்ளது.

## முடிவுரை

இயற்கை விளக்கம் இயற்கையும் பல்வேறு கவிஞர்களும், இலக்கியத்தில் இயற்கை. சங்கப்புலவர்கள் இயற்கையைப் பாடுபொருட்களாகி விளக்கியுள்ளனர். ஞாயிறு, மழை, நிலங்கள்

போன்றவற்றின் வருணனைகள், சங்கப்பாடல்களில் விளக்கப்பட்டுள்ளன. பூக்கள், குன்றம் போன்ற இயற்கைப் பொருட்களையும் சங்க இலக்கியத்தில் வருணித்துள்ளார். ஆகவே இயற்கையை பாதுகாப்போம். இளையதலைமுறைக்கு இயற்கையை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.

## References


Ilampuranar, (2018) Tholkapiyam, Saratha Pathipagam, Chennai, India.

Pooliyoor Kesikan (2000) Silapathikaram, Pari Nilayam, Chennai, India.

Puliyoor Kesikan (2002) Kuruthogai Saratha Pathipagam, Chennai, India.

Puliyoor Kesikan (2005) Purananooru Saratha Pathipagam, Chennai, India.

Subramanian, S.V. (2018) Sangam Literature, Manivkavasagar Pathipagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License